டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 29.05.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 282 - Madurai | Online Edition

# நாட்டின் வரலாற்றிலேயே மிக அதிக அளவு உணவு தானிய உற்பத்தி

## விவசாயிகளுக்கு மத்திய அமைச்சர் பாராட்டு

புது தில்லி, மே 28

மத்திய வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான், 2025-26 ஆம் ஆண்டுக்கான முக்கிய வேளாண் பயிர்களின் உற்பத்தி குறித்த மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளை நேற்று முன்தினம் (27.05.26) புதுதில்லியில் வெளியிட்டார். பிரதமர் நரேந்திர மோடியின் தலைமை யிலான, அரசு விவசாயிகளின் செழிப்பு, வேளாண் துறையின் வளர்ச்சிக்காகத் தொடர்ந்து பணியாற்றி வருகிறது என்றும், அதன் நேர்மறையான தாக்கம் தற்போது சாதனை அளவிலான வேளாண் உற்பத்தியின் வடிவில் தெரிகிறது என்றும் கூறினார்.

மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகளின் படி, நாட்டின் மொத்த உணவு தானிய உற்பத்தி 376.563 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது கடந்த ஆண்டின் உற்பத்தியான 357.732 மில்லியன் டன்களை விட கிட்டத்தட்ட 18.8 மில்லியன் டன்கள் அதாவது 5.3% அதிகமாகும். இது நாட்டின் வரலாற்றிலேயே மிக அதிகபட்ச உணவு தானிய உற்பத்தியாகும். இந்த வரலாற்றுச் சாதனைக்காக சிவராஜ் சங் சௌகான் விவசாயிகளுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

வேளாண்மை அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட மூன்றாவது முன்கூட்டிய மதிப்பீடுகள், இந்தியாவின் விவசாய முன்னேற்றம் குறித்த வலுவான ஊக்கமளிக்கும் போக்குகளை வெளிப்படுத்து கின்றன. பயிர் வாரியான சுருக்கத் தகவல்களைப் பகிர்ந்து கொண்ட மத்திய வேளாண் அமைச்சர், நெல் உற்பத்தி சாதனை

அளவாக 154.024 மில்லியன் டன்களாகவும், கோதுமை 120.657 மில்லியன் டன்களாகவும், மக்காச்சோளம் சாதனை அளவாக 55.093 மில்லியன் டன்களாகவும் மதிப்பிடப்பட்டு உள்ளது என்றார்.

சிறுதானிய உற்பத்தி 17.584 மில்லியன் டன்களாகவும், துவரை 3.592 மில்லியன் டன்களாகவும், கொண்டைக்கடலை 12.514 மில்லியன் டன்களாகவும், பயறு 1.762 மில்லியன் டன்களாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேபோல், மொத்த எண்ணெய் வித்துக்களின் உற்பத்தி 43.059 மில்லியன் டன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. நிலக் கடலை உற்பத்தி சாதனை அளவாக 13.074 மில்லியன் டன்களையும், சோயாபீன்ஸ் உற்பத்தி 12.596 மில்லியன் டன்களையும் எட்டியுள்ளது.

கரும்பு உற்பத்தி சாதனை அளவாக 500.063 மில்லியன் டன்களாகவும், பருத்தி உற்பத்தி 29.024 மில்லியன் பேல் களாகவும், சணல் உற்பத்தி 9.176 மில்லியன் பேல்களாகவும் மதிப்பிடப்பட்டுள்ளது.

2024-25-ம் ஆண்டில் இதே காலகட்டத்தில் 150.184 மில்லியன் டன்களாக இருந்த நெல் உற்பத்தி, இந்த ஆண்டு 154.024 மில்லியன் டன்களாக உயர்ந்துள்ளதாக சௌகான் தெரிவித்தார்.

மண், நீர் வள மேலாண்மை, பருவநிலைக்கேற்ற வேளாண்மை, நிலையான வேளாண் தொழில்நுட்பங்களில் ஏற்பட்டுள்ள ஒருங்கிணைந்த புத்தாக்கங்கள் போன்றவை, முக்கிய வேளாண் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளன என்று வேளாண் துறை அமைச்சர் சிவராஜ் சிங் சௌகான் தெரிவித்தார்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நாட்டின் எண்ணெய் சுத்திகரிப்புத் திறன், பெட்ரோல், டீசலின் முழுமையான உள்நாட்டு விநியோகத்தை உறுதி செய்கிறது

புது தில்லி, மே 28

சில்லறை விநியோகம், தொழில்துறை தேவைகள் என அனைத்து உள்நாட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்வதற்குத் தேவையான பெட்ரோல், டீசல் கையிருப்பு நாட்டில் போதுமான அளவுக்கும் அதிகமாக உள்ளது என்பதை மத்திய அரசு சந்தேகத்திற்கு இடமின்றி பதிவு செய்துள்ளது.

இந்தியா உலகின் நான்காவது பெரிய எண்ணெய் சுத்திகரிப்பு நாடாகும். செயல்பாட்டில் உள்ள 22 சுத்திகரிப்பு நிலையங்கள், ஆண்டுக்கு 258.1 மில்லியன் டன்கள் என்ற நிறுவப்பட்ட அளவைக் கொண்டுள்ளன. 2025-26-ம் நிதியாண்டில் உள்நாட்டு நுகர்வு 243.2 மில்லியன் டன்களாக இருந்தது. அதே ஆண்டில் பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி 61.5 மில்லியன் டன்களாக இருந்தது. உலகளவில் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களை ஏற்றுமதி செய்யும் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றாக இந்தியா திகழ்கிறது. எந்த விதமான விநியோகப் பிரச்சினையும் இல்லை.

மத்திய பெட்ரோலியம், இயற்கை எரிவாயுத் துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி, அனைவருக்கும் பெட்ரோல், டீசல் தடையின்றி விநியோகிக்கப்படுவதை உறுதி செய்வதற்காக, பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள், மாநில அரசுகள், தொழில் அமைப்புகளுடன் தொடர்ச்சியான ஒருங்கிணைப்பில் ஈடுபட்டு வருகிறார். அரசு நிலைமையைத் தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறது.

பெட்ரோலியம், இயற்கை எரிவாயுத் துறைச் செயலாளர், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களின் தலைமைச் செய லாளர்கள், தொழில் துறையினர் ஆகியோருடன் நிலைமையை ஆய்வு செய்தார். பெட்ரோலியப் பொருளுக்கு எந்தவொரு பற்றாக்குறை இல்லை.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

### அடுப்பில்லா பழ உணவுகளின் நன்மைகள்

அடுப்பில்லா சமையலில் பழங்களை அடிப்படையாகக் கொண்ட உணவுகளை உட்கொள்வது பல ஆரோக்கிய நன்மைகளை வழங்குகிறது.

### எச்சரிக்கைகள்

அடுப்பில்லா பழ உணவுகள் ஆரோக்கியமானவை என்றாலும், சில எச்சரிக்கைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்:

- சுகாதாரம் : பழங்களை நன்கு கழுவி சுத்தம் செய்வது மிகவும் முக்கியம், ஏனெனில் சமைக்கப்படாத உணவுகளில் பாக்டீரியா தொற்று ஏற்படும் அபாயம் உள்ளது.
- **பழங்களின் தேர்வு** : புதிய மற்றும் பழுத்த பழங்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். கெட்டுப்போன அல்லது அழுகிய பழங்களைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவும்.
- **ஒவ்வாமை** : சிலருக்கு குறிப்பிட்ட பழங்களால் ஒவ்வாமை ஏற்படலாம். அத்தகைய பழங்களைத் தவிர்ப்பது அவசியம்.

தொகுப்பு : ***G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.***

**நாளை தொடரும்...**



# கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு RAWE மாணவர்கள் கல்விசார் பயணம்




கடலூர், மே 28

அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புலத்தின் இறுதி ஆண்டு இளங்கலை வேளாண்மை பயிலும் B-2 RAWE குழு மாணவர்கள் ஊரக வேளாண் பணி அனுபவ திட்டத்தின் ஒரு பகுதியாக கடலூரில் அமைந்துள்ள கரும்பு ஆராய்ச்சி நிலையத்திற்கு கல்வி சார் பயணம் மேற்கொண்டனர். பயணத்தின் போது மாணவர்கள் பல்வேறு கரும்பு ரகங்கள், கரும்பு இனப்பெருக்க நுட்பங்கள், நில நாற்றங்கால் பகுதி, கிளோன் நாற்றங்கால் பகுதி மற்றும் கரும்பு விதைகள் குறித்து அறிந்து கொண்டனர். இவற்றை முனைவர் P.சதீஷ்குமார், துணைப்பேராசிரியர், தாவர இனப்பெருக்கவியல் மற்றும் மரபியல் துறை விளக்கமாக எடுத்துரைத்தார்.

மேலும், ஆய்வக பார்வையின் போது முனைவர் M ஜெயந்தி, இணைப் பேராசிரியர், முனைவர் P சிவசக்திவேலன், துணைப் பேராசிரியர், வேளாண் நுண்ணுயிரியல் துறை மற்றும் முனைவர் K அறிவுக்கரசு, துணைப் பேராசிரியர், உழவியல் துறை ஆகியோர் ஆராய்ச்சி செயல்பாடுகள் குறித்து மாணவர் களுக்கு விளக்கமளித்தனர்.

இப்பயணம் மாணவர்களுக்கு கரும்பு ஆராய்ச்சி தொடர்பான நடைமுறை அறிவை மேம்படுத்தும் வகையில் அமைந்தது.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய மாநிலத்திற்கு உள்ளான விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா



திருச்சி, மே 28

திருச்சி மாவட்டம், லால்குடி வட்டாரம் வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் நெற்பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய மாநிலத்திற்கு உள்ளான விவசாயிகள் கண்டுணர்வு சுற்றுலா இனத்தின் கீழ் 26.06.26 முதல் 27.05.26 இரண்டு நாட்கள் நடைபெற்றது.

இதில் ஆடுதுறையில் அமைந்துள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையம் உதவி பேராசிரியர் முத்துக்குமார் ராஜா பேசுகையில் புதிய நெல் ரகங்கள், நெல் சாகுபடியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, களை மேலாண்மை பற்றி விரிவாக விளக்கி கூறினார். அதன் பின்பு ஒருங்கிணைந்த பண்ணையம் கடைபிடிக்கப்படும் தொழில் நுட்பங்கள் பற்றி அருள் ஆனந்த் உதவி பேராசிரியர், விரிவாக விளக்கி கூறினார்.

இரண்டாம் நாள் இயற்கை விவசாயி கும்பலிங்கம், நெல் சாகுபடியில் பாரம்பரிய நெல் ரகங்கள் பராமரிப்பு இயற்கை இடு பொருட்கள் தயார் செய்தல் தயார் செய்தல், நெல்லில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்கள் விற்பனை வாய்ப்பு பற்றி விரிவாக விவசாயிகளுக்கு விளக்கி கூறினார்.

மேலும் நெல் சாகுபடியில் தக்கை பூண்டு, சணப்பை, ஒருங்கிணைந்த களை மேலாண்மை பற்றி பேராசிரியர் மற்றும் தலைவர் பார்த்திபன், விவசாயிகளுக்கு விரிவாக விளக்கி கூறினார். மேலும் வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் காட்டுத் தோட்டத்தில் விவசாயத்தில் கடைபிடிக்கப்படும் நவீன தொழில் நுட்பங்கள் மற்றும் ஆராய்ச்சி திடல்கள் பற்றி அழைத்துச் சென்று மாற்று பயிர் சாகுபடி ஒருங்கிணைந்த பண்ணையம்,

அசோலா வளர்ப்பு மீன் வளர்ப்பு, நெல்லில் களை மேலாண்மை உளுந்தில் வளர்ச்சி ஊக்கி பயன்படுத்துதல் பற்றி விரிவாக பழனிச்சாமி, விவசாய விரிவாக விளக்கிக் கூறினார். இந்த சுற்றுலாவில் லால்குடி வட்டாரத்தில் சேர்ந்த பல முன்னோடி விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

இதற்கான ஏற்பாட்டினை லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சத்யபிரியா, அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிச்செல்வன், உதவி தொழில் நுட்ப மேலாளர் கார்த்திக், வேளாண்மை உதவி அலுவலர்கள் லால்குடி வட்டாரம் செய்திருந்தனர்.



# நவீன வேளாண்மையில் இளம் பட்டதாரி விவசாயி

### விரிவாக்கமும் சமூகப் பங்களிப்பும்

நாளடைவில் தேவை அதிகரித்தால் பிற விவசாயிகளிடமிருந்தும் விளைபொருட்களை இடைத்தரகர்களை விடக் கூடுதல் விலைக்குக் கொள்முதல் செய்யத் தொடங்கினார். இவற்றை கார்ப்பரேட் நிறுவனங்களின் தர எதிர்பார்ப்புக்கு ஏற்பத் தரம் பிரித்து விற்பனை செய்கிறார். முதல் தரமான பழங்களை நிறுவனங்கள் பெற்றுக் கொள்ள இரண்டாம் தரப் பழங்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்தவற்கான மாற்று வழிகளையும் அவர் தயார் நிலையில் வைத்துள்ளார். இதனால் பெரிய அளவில் இழப்புகள் ஏற்படுவதில்லை.

உள்ளூர் விளைபொருட்கள் மட்டுமின்றி நிறுவனங்களின் வேண்டுகோளுக்கிணங்க ஆப்பிள், மாதுளை, ஆரஞ்சு, அவ கோடா, டிராகன் புரூட் புளுபெரி, உள்ளிட்ட பல்வேறு பழங்களை உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் தருவித்து விற்பனை செய்து வருகிறார்.

### வேலை தேடுபவரிலிருந்து வேலை தருபவராக

‘இனி வேலை தேடுவது என் வேலையல்ல வேலை தேடுவோருக்கு வாய்ப்பு வழங்கும் நிலைக்கு நான் நகர்ந்துள்ளேன். உரிய விலை கிடைக்காமல் தவிக்கும் சக விவசாயிகளுக்கும் என்னால் முடிந்த உதவிகளைச் செய்து வருகிறேன் என கூறுகிறார் பூபதிராஜ்.

பட்டம் என்பது வெறும் காகிதமல்ல அது ஒரு கருவி, அந்த கருவியை மண்ணில் சரியாகப் பிரயோகிகக்கும்போது, மண் பொன்னாக மாறும் என்பதற்கு இந்த மெக்கானிக்கல் இன்ஜினியர் ஒரு மிகச்சிறந்த உதாரணம். வேலையைத் தேடுவதை விட வேலை வாய்ப்பை உருவாக்குவதே உண்மையான சாதனை. அதிலும் குறிப்பாக லாபம் இல்லாத தொழில் என்று கருதி பலரும் விவசாயத் துறையை விட்டு விலகிச் செல்லும் சூழலில் அத்துறையில் இறங்கி அவர் நிகழ்த்தியிருக்கும் இந்த வெற்றி மகத்தான சாதனையாகக் கருதப்படுகிறது.

### நேரடி சந்தைப்படுத்தலும் தாரக மந்திரமும்

விவசாயிகள் பொதுவாக தங்கள் விளைபொருட்களை அப்படியே விற்பனை செய்வதால் போதிய லாபம் ஈட்ட முடிவதில்லை.

'இடைத்தாரர்களைத் தவிர்த்து, சமூக வலைதளங்கள் மற்றும் கார்ப்பரேட் சந்தைகள் மூலம் நேரடியாக நுகர்வோரைச் சென்றடையும் வழியைக் கண்டறிந்தேன். இது ஒரே நாளில் சாத்தியப்படவில்லை. நீண்ட தேடலின் விளைவாகவோ கிடைத்தது. எனத் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொள்கிறார் பூபதிராஜ்.

பொருளை மதிப்பு கூட்டி விற்பது, தனது தயாரிப்புக்குத் தானே விலை நிர்ணயம் செய்வது நிலையான மற்றும் அதிக லாபம் ஈட்டுவது இதுவே பூபதிராஜின் வியாபாரத்தாரக மந்திரம்.

**சவாலைச் சாதகமாக்கிய பொறியியல் மூளை**

வேலையிழந்த தொடக்கத்தில் மனச்சோர்வு ஏற்பட்டாலும் தனது குடும்பத்தின் பூர்வீகத் தொழிலான விவசாயத்தை ஏன் நவீனப் படுத்தக்கூடாது என்ற சிந்தனை அவருக்கு உதித்தது. வழக்கமான தென்னை சாகுபடியுடன் நின்றுவிடாமல் தனது பொறியியல் அறிவை விவசாயத்தில் புகுத்தினார்.

வீரிய ரகக் கொய்யா சாகுபடியைத் தொடங்கிய அவர், விளைபொருட்களை உள்ளூர் இடைத்தரகர்களிடம் விற்பனை செய்யாமல் சஷ்வி பார்ம்ஸ் எனும் நிறுவனத்தை தொடங்கி நேரடியாக கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யத் தொடங்கினார்.

தொடக்கத்தில் தனி ஒரு மனிதனாகத் தனது பயணத்தை தொடங்கிய பூபதிராஜ் ஐந்தே ஆண்டுகளில் 20க்கும் மேற்பட் டோருக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிலைக்கு உயர்ந்துள்ளார். இன்று சொந்தமாகச் சரக்கு வாகனங்களைக் கொண்டு மிக நேர்த்தி யாகத் தனது வர்த்தகத்தைச் செய்து வருகிறார்.

**இயந்திரக் கனவுகளும் விவசாய வேர்களும்**

திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே உள்ள கொடிங்கியம் கிராமத்தைச் சேர்ந்தவர் பூபதிராஜ் (73732 44687) எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த இவர் இயந்திரங்களின் மீது கொண்ட ஈரப்பால் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் நிறுவனங் களில் கைநிறையச் சம்பளத்துடன் பணியாற்றி வந்தவருக்கு 2020 இல் ஏற்பட்ட கோவிட் ஊரடங்கு பெரும் திருப்புமுனையாக அமைந்தது.

நிறுவனம் ஆட்குறைப்பு செய்தபோது வேலையை இழந்த பூபதிராஜ் தனது சொந்த ஊருக்குத் திரும்பினார்.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.***

# விவசாய அடையாள எண் பெற 31.05.26 கடைசி நாள்

புதுக்கோட்டை, மே 28

புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சு.ராதாகிருஷ்ணன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில்,

விவசாயிகள் அனைவரும் தாங்கள் பயனடையும் வகையில் மத்திய மற்றும் மாநில அரசால் வழங்கப்படும் அனைத்து சலுகைகள் பெறவும் தங்கள் விவசாய நிலத்திற்கு பயன்படுத்தக் கூடிய உரங்கள் மற்றும் வேளாண் கருவிகள் அனைத்தும் அரசின் மானிய திட்டங்கள் பெறுவதற்கும் விவசாயிகள் தங்கள் நில உடமைகளை சரிபார்த்து விவசாய அடையாள எண் பெற்றுக் கொள்ளலாம்.

நேரடி சிட்டா உள்ள விவசாயிகள் அனைவரும் வேளாண்மை துறை, தோட்டக்கலை துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை, வேளாண் பொறியியல் துறை அலுவலர் உங்கள் இல்லம் தேடி வருகிறார்கள். இந்த நல்ல வாய்ப்பை பயன்படுத்தி தங்கள் பெயரில் உள்ள கணினி சிட்டா, ஆதார் கார்டு மற்றும் ஆதாருடன் இணைக்கப்பட்ட மொபைல் எண்ணை கொடுத்து விவசாய அடையாள எண் பெற்றுக் கொள்ளலாம். அடையாள எண் பெறுவதால் மத்திய மாநில அரசின் நேரடி மானியங்கள் பெறலாம். பிரதம மந்திரியின் கவுரவ நிதி திட்டத்தில் வருடம் தோறும் ரூபாய் 6000/- பணம் பெறும் விவசாயிகள் கண்டிப்பாக விவசாய அடையாள எண் பெற்றிருக்க வேண்டும். எனவே இந்த வாய்ப்பை வாய்ப்பை பயன்படுத்தி வரும் 31.5.26க்குள் பதிவு செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# அதிகபடியான இரசாயன உரங்கள் பயன்பாட்டால் ஏற்படும் பாதிப்புகள்? அவற்றிலிருந்து மீள்வது எப்படி?



நம்முடைய நாட்டில் 150 கோடி மக்கள் தொகை கொண்ட நாட்டில் சுமாராக 23 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் தான் இயற்கை விவசாயம் (NATURAL FARMING) உள்ளது.

இன்று இயற்கை விவசாயத்தின் நன்மைகள் குறித்து நாடு முழுவதுமாக பரவலாக பேசப்பட்டு வந்தாலும் கூட இன்றைய ஏதார்த்த கள நிலவரம் முற்றிலும் மாறாக உள்ளது. ஆனால் அதிகளவு மக்கள் தொகை கொண்ட நம்நாட்டின் மொத்த சாகுபடி பரப்பளவில் இது வெறும் 5% தான். மீதமுள்ள 95% பரப்பளவில் இன்னும் இராசயன உரங்களின் பிடியிலிருந்து மிளவில்லை என்பது தான் உண்மை.

**இரசாயன உரங்களின் பயன்பாடு?**

உலக அளவில் சீனாவிற்கு அடுத்த படியாக அதிகமாக யூரியாவை பயன்படுத்தும் நாடுகளில் இந்தியா இரண்டாவது நாடாக உள்ளது குறிப்பிடதக்கது. பசுமை புரட்சிக்கு பின்னர் தான் இந்த உர பயன்பாடு ஆண்டுதோறும் அதிகரித்த வண்ணமாக உள்ளது. ஆண்டுதோறும் 600-650 மெ.டன் ரசாயன உரங்கள் பயன்படுத்த படுகின்றன.

**இரசாயன உர பயன்பாட்டில் வேளாண் நிபுணர்களின் பரிந்துரை?**

மண்வளத்தை பாதுகாக்க தழை, மணி, சாம்பல் சத்துகள் (N.P.K) முறையே 4:2:1 என்ற விகிதத்தில் இருக்க வேண்டும். ஆனால் கடந்த 2024-25 சர்வே படி தற்போதைய உர பயன்பாடு இரண்டு மடங்காக அதிகரிக்கப்பட்டுள்ளன. அதாவது தழை 10.9 மணி 4.1 சாம்பல் 1.1 என்ற விகித்தில் உள்ளது.

**யூரியா அதிகமாக பயன்பாடு எதனால்?**

இருக்கின்ற உரங்களில் யூரியா (UREA) மட்டுமே விலை மலிவானது. அதனால் அதிகமாக இந்த உரத்தை விவசாயிகள் போட்டி போட்டுக் கொண்டு வயலில் இடுவது வாடிக்கையாக மாறிவிட்டது. எத்தனையோ விழிப்புணர்வு ஏற்படுத்தினாலும் விவசாயிகளின் மனதில் ஆழமாக பதிந்துள்ள உரம் யூரிவா மட்டும். தற்போது சுற்றுப்புற சூழலியல்கேற்ற நானோ திரவ யூரியாவை அறிமுகப்படுத்தினாலும் மாறாக திட யூரிவை தான் விவசாயிகள் விரும்புவதை கண் கூடாக காண முடியும்.

**ஒரு கிலோ யூரியா நிலத்தில் போட்டால் எத்தனை கிலோ மகசூல் வந்தது? தெரியுமா?**

1970யில் பசுமை புரட்சி காலத்துல ஒரு கிலோவை இட்டால் 13 கிலோ மகசூல் கிடைத்தாக தரவுகள் உள்ளன. ஆனால் அது படிப்படியாக குறைந்த இன்று ஒரு கிலோ இட்டால் 2.5-3 கிலோ மகசூல் வரை குறைந்துள்ளது. இதற்கான அடிப்படை காரண மாக மண்ணின் வளம் குன்றியதை தவிர வேறு ஏதுவுமில்லை. 30% நிலங்கள் அமிலதன்மையுடையதாக மாறிவிட்டது என ICAR தெரிவித்துள்ளன.

**வளமான மண்ணில் கரிம சத்துகள் எவ்வளவு இருக்க வேண்டும்?**

வளமான மண்ணில் 1% இருக்க வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் 0.3% தான் ஆர்கானிக் கார்பன் உள்ளது.

**இரசாயன உரங்களின் பிடியிலிருந்து தப்பிக்க என்ன வழி?**

இயற்கை விவசாயம் தான். எக்காரணம் இராசயனயங்களை பயன்படுத்தாமல் முழுக்க முழுக்க தொழுஉரம் சார்ந்த விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும். முதலில் 3 ஆண்டுகளுக்கு நஷ்டம் வந்தாலும் படிப்படியாக மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

**இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க அரசு என செய்ய வேண்டும்?**

மக்களிடம் போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தி விளைபொருட்களுக்கு தகுந்த விலை நிர்ணயம் செய்வதுடன் மட்டுமல்லாது முதல் மூன்று ஆண்டுகளுக்கு உதவித்தொகை வழங்கிட வேண்டும். சிக்கிம், கியூபா, இலங்கை போன்ற நாடுகளை போல சரிவுகள் ஏற்படாமல் கண்காணிக்க வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# சுத்தமான பால் உற்பத்தி – ஒரு பார்வை



உலக மக்கள் அனைவராலும் உட்கொள்ளப்படும் ஒரு உணவு பால் ஆகும். பால் குழந்தைகள், பெரியவர்கள், நோயாளிகள் மற்றும் முதியவர்கள் என்ற வேறுபாடுகள் இல்லாமல் அனைவருக்கும் ஏற்ற எளிதில் செரிக்கக்கூடிய சத்தான முழுமையான உணவாகும். பாலில் மனிதனுக்கு தேவையான அனைத்துச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உள்ளன. நாம் பாலாக உண்பது மட்டுமின்றி இதனைத் தயிர், வெண்ணெய், நெய், பால்கோவா போன்ற பால் பொருட்களை நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகிறோம். பாலில் கொழுப்பு, புரதம், சர்க்கரைச் சத்துக்களும், தாது உப்புகள் மற்றும் வைட்டமின் களும் உள்ளன.

**பாலில் உள்ள சத்துக்கள்**

| பால் | கொழுப்பு (%) | புரதம் (%) | சர்க்கரை (%) |
|---|---|---|---|
| பசும் பால் | 3.5-4.3 | 3-3-5 | 4.60 |
| எருமை பால் | 7.20 | 4.80 | 4.50 |

இவ்வாறு மிகவும் அத்தியாவசியமாக உள்ள பாலானது சுத்த மாகவும், சத்துக்கள் கெடாதவாறும் இருந்தால் தான் இதனை உற்பத்திசெய்யவர்களுக்கும் உண்பவர்களுக்கும் நன்மை பயக்கும். சுத்தமான சுகாதாரமான சூழ்நிலையில் பால் உற்பத்தி செய்யப்படாவிட்டால் பால் கெட்டு போவது மட்டுமின்றி இந்த சூழ்நிலையில் இருந்து பெறப்பட்ட பாலை உபயோகிப்பதனால் மனிதனுக்கு பல்வேறான நோய்கள் வரக்கூடும். இதனைத் தடுப்பதற்கு தூய்மையான முறையில் பால் உற்பத்தி செய்தல் அவசியம்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

## பாலில் அதிக அளவில் நுண் கிருமிகள் புகும் வழிகள் மற்றும் தடுப்பு முறைகள்

- மாடுகளிலிருந்து
- கறவையாளரிடமிருந்து
- பால் கறக்கும் பாத்திரம் மூலமாக
- தொழுவம் மற்றும் சுற்றுப்புறத்திலிருந்து

### மாடுகளிலிருந்து

பாலை சுத்தமான முறையில் கையாளுவது மாட்டிலிருந்து ஆரம்பிக்கிறது. மாடு நோய் வாய்ப்பட்டிருந்தால் சில கிருமிகள் பாலில் காணப்படுகின்றன. எனவே நோய் வாய்பட்ட கறவைகளிலிருந்து கறக்கும் பாலை தனியாக பிரிக்க வேண்டும். பால் கறப்பதற்கு முன்மடி, தொடை ஆகியவற்றை தண்ணீரால் பிரஷ் கொண்டு தேய்ந்து கழுவிய பின் பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலில் கழுவிய பின் தூய்மையான தண்ணீரில் கழுவிய பின் உலர்ந்த துணியால் துடைந்து விடவேண்டும். இது போன்ற நடைமுறைகளை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு முறை பாலை கறக்கும் போதும் கடைப்பிடித்தல் அவசியமாகும். மேலும், கறவையினங்களுக்கு ஏதாவது நோய் அறிகுறிகள், மடிவீக்கம் போன்றவைகள் தெரிந்தால் உடனடியாக சங்கப் பணியாளரைத் தொடர்பு கொண்டு கால்நடை மருத்துவர் மூலமாக சிசிச்சை அளிக்க வேண்டும்.

### கறவையாளர் மூலமாக

- கறவையாளர்கள் சுகாதார நடைமுறை விதிகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- விரல்களில் நகங்கள் இருக்கக்கூடாது.
- தூய்மையான உடைகளை அணிய வேண்டும்.
- பால் கறப்பதற்கு முன் சோப்பு போட்டு கைகளைக் கழுவிய பிறகே பால் கறக்க வேண்டும்.
- ஆரம்பத்தில் கறக்கும் பாலில் நுண்கிருமிகள் இருக்க வாய்ப்பு உண்டு. எனவே துவக்கத்தில் கறக்கும் பாலை இரண்டு அல்லது மூன்று முறை கறந்து கீழேவிட வேண்டும்.
- கறவையாளர்கள் புகைப்பிடித்தல் மற்றும் புகையிலை பழக்கத்தை தவிர்க்க வேண்டும்.
- கறவையாளர்கள் எச்சில் துப்புதல், இருமல், தும்முதல் ஆகியவற்றை தவிர்த்தல் வேண்டும்.
- கறவையினங்களுக்கு குறிப்பிட்ட நாளில் தடுப்பு ஊசி போடுதல் அவசியம்.

### பால்கறக்கும் பாத்திரம்

- கறப்பதற்கு முன் பாத்திரங்களை சுத்தமாக கழுவிவிட வேண்டும்.

● பாத்திரங்களை மூடி வைக்க வேண்டும்.

● பாத்திரத்தை வேறு எந்த உபயோகத்திற்கும் பயன்படுத்த கூடாது

● பால் கறக்கும் பாத்திரம் ஸ்டெயின்லஸ்ஸ்டீல் (எவர்சில்வர்) பாத்திரமாக இருக்க வேண்டும், மேலும் பாத்திரங்கள் வாய் அகலமாக இல்லாமல் குறுகலாக இருக்க வேண்டும்.

## தொழுவம் மற்றும் சுற்றுப்புறம்

● மாட்டுத் தொழுவத்தின் தரை சுத்தமாக, சமமாக, காற்றோட்ட வசதி உள்ளதாக இருத்தல் வேண்டும்.

● கழிவுநீர் சுலபமாக செல்லும் வகையில் தளம் மற்றும் கால்வாய் அமைக்க வேண்டும். தினந்தோறும் தண்ணீர் விட்டு கழுவி சாணத்தை அப்புறப்படுத்தல் வேண்டும். மாட்டின் கழிவுப் பொருட் களை அடிக்கடி அகற்றிவிட வேண்டும்.

● தொழுவத்தில் கிருமி நாசினி தெளிப்பான் அல்லது ஈ கொல்லி மருந்து தெளித்தல் வேண்டும்.

● வைக்கோல் போன்ற தீவனங்களில் தூசி அதிகமாக இருப்ப தால், தூசி காற்றில் தங்கி பாலில் விழக்கூடும். எனவே பால் கறக்கும் போது தீவனம் போடக் கூடாது.

● மாட்டுக் கொட்டகையில் தூசி, குப்பை, சிலந்தி மற்றும் ஈக்கள் இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

## கறவை மாட்டின் ஆரோக்கியம்


● கறவை மாட்டிற்கு கறவை மற்றும் சினைக் காலங்களின் போது சமச்சீர் தீவனம் மற்றும் சுத்தமான தண்ணீர் அளிக்க வேண்டும்.

● கறவை மாட்டிற்கு மடி நோய் வராமல் தடுத்தல், தொற்று நோய்களான அடைப்பான், சப்பை நோய், தொண்டை அடைப் பான், வாய்க்கால் கோமாரி, கருக் கலைதல் ஆகிய நோய்களுக்கு தகுந்த நேரத்தில் தடுப்பூசி போடுதல்.

● மாட்டிற்கு கறவை மற்றும் கருத்தரிப்பு காலங்களில் குடற்புழு நீக்கம் செய்தல், புற ஒட்டுண்ணிகளான ஈ, பேன், உண்ணிகளை கட்டுபடுத்துவதன் மூலம் இரத்த ஒட்டுண்ணிகளால் ஏற்படும் நோய்களை கட்டுப்படுத்துதல்.

● பால் கறக்கும் முன்பு கால்நடைகளை மெல்லிய பிரஷ் மூலம் தேய்த்து சுத்தம் செய்யவும், வெப்பமான நாட்களில் தினமும் தண்ணீரால் உடலை சுத்தம் செய்யவும்.

தகவல் : ***மரு.இராமகிருஷ்ணன்.சி, முனைவர் மூ.சுதா, முனைவர் அ.வானதி மற்றும் மரு.தேவதர்சினி,சி.மு, கால்நடை உற்பத்திப் பொருட்கள் தொழில்நுட்பத் துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தேனி – 625 534.***


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# உயர்ந்த ஊட்டச்சத்து கொண்ட கேழ்வரகு சாகுபடி தொழில்நுட்பங்கள்

கேழ்வரகு (Finger Millet / Ragi / Eleusinecoracana) என்பது மிக உயர்ந்த ஊட்டச்சத்து கொண்ட பாரம்பரிய சிறுதானியம். இது பல மருத்துவ பலன்களுக்காகவும் புகழ் பெற்றது. கேழ்வரகு, கேப்பை என்று பரவலாக பல்வேறு பெயர்களில் அறியப்படுகிறது. கேழ்வரகில் (ராகி) உடலுக்குத் தேவையான வைட்டமின்களும், தாதுக்களும் மிக அதிக அளவில் நிறைந்துள்ளன.

**100 கிராம் கேழ்வரகில் உள்ள ஊட்டச்சத்துக்கள்**

| | |
|---|---|
| கால்சியம் | 344 மி.கி |
| இரும்புச் சத்து | 3.9 மி.கி |
| நார்ப் பொருள் | 3.6 கிராம் |
| புரதச் சத்து | 7.3 கிராம் |
| கார்போஹைட்ரேட் | 72.6 கிராம் |
| கொழுப்புச் சத்து | 1.3 கிராம் |
| ஆற்றல் (கலோரி) | 328 கி.கலோரி |



தமிழகத்தின் பாரம்பரிய உணவுகளில் முதன்மையான இடத்தைப் பிடிப்பது கேழ்வரகு கூழ். ஒரு காலத்தில் ஏழைகளின் உணவாகப் பார்க்கப்பட்ட இது, இன்று அதன் அபரிமிதமான மருத்துவக் குணங்களால் உலகெங்கும் உள்ள ஆரோக்கிய விரும்பிகளால் தேடித்தேடி உண்ணப்படும் உணவாக மாறி உள்ளது. நவீன கால உணவுகளுக்கு ஈடாக ராகியில் உள்ள சத்துக்கள் உடலுக்குப் பல நன்மைகளைத் தருகின்றன. வெயில் காலத்தில் உடல் வெப்பத்தால் ஏற்படும் சோர்வைத் தடுத்து, உடலை உடனடியாகக் குளிர்ச்சியடையச் செய்கிறது. மற்ற தானியங்களை விட ராகியில் கால்சியம் சத்து 10 மடங்கு அதிகம். கேழ்வரகில் அதிகளவு சுண்ணாம்புச் சத்து உள்ளது. வளரும் குழந்தைகளின் எலும்பு வளர்ச்சிக்கும், வயதானவர்களுக்கு எலும்புத் தேய்மானம் (Osteoporosis) வராமல் தடுக்கிறது.

கேழ்வரகிலுள்ள மாவுச் சத்து மெதுவாக சர்க்கரையாக மாறும் தன்மையுள்ளதால் கேழ்வரகினை உண்பதால் நீரிழிவு நோய் வராமலிருக்கவும், நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு சர்க்கரை யின் அளவை கட்டுப்பாட்டினுள் வைக்கவும் உதவுகிறது.

மேலும் இதில் நார்ச்சத்து அதிகமாக உள்ளதால் ஜீரண சக்தியை அதிகமாக்கவும், இரத்தத்திலுள்ள சர்க்கரை அளவு சீராக இருக்க உதவுகிறது. இது மெதுவாகச் செரிமானமாவதால் பசி எடுப்பதைக் குறைத்து உடல் எடையைக் கட்டுப்படுத்தவும் உதவுகிறது. இதில் இரும்புச் சத்து மிகுதியாக இருப்பதால், இரத்த சோகை (Anemia) உள்ளவர்கள் தொடர்ந்து எடுத்துக் கொண்டால் ஹீமோகுளோபின் அளவு அதிகரிக்கும். இரத்த சோகை நோய் வராமல் தடுக்க கேழ்வரகிலுள்ள இரும்புசத்து மிகவும் பயன் படுகிறது. ராகியில் உள்ள அமினோ அமிலங்கள் பதற்றம் மற்றும் மன அழுத்தத்தைக் குறைத்து நல்ல தூக்கத்தைத் தரக் கூடியவை. கேழ்வரகு கஞ்சி, கூழ், அடை, தோசை, இட்லி, ராகி மால்ட் மற்றும் ரொட்டி போன்ற பல்வேறு வகைகளில் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

எத்தியோப்பியாவின் உயர்ந்த மலைப்பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்ட இப்பயிர் ஏறத்தாழ 4000 ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவில் வெப்பமண்டலம் மற்றும் மிதவெப்ப மண்டலப் பகுதிகளில் அதிகமாக பயிர் செய்யப்படுகிறது. கர்நாடகாவும், தமிழ்நாடும் கேழ்வரகு சாகுபடி செய்யும் முதன்மை மாநிலங்களாக உள்ளன. இந்தியாவில் கர்நாடகா, தமிழ்நாடு, ஆந்திரா, ஒரிசா, குஜராத், மஹாராஷ்டிரா மற்றும் உத்திரபிரதேசம், பீகார் மற்றும் இமாச்சல பிரதேசம் மலைப் பகுதிகளிலும் சாகுபடி செய்யப் படுகிறது. ஆப்பிரிக்கா, மடகாஸ்கர், இலங்கை, மலேசியா, சீனா மற்றும் ஜப்பான் நாடுகளிலும் பயிர் செய்யப்படுகிறது.

**கேழ்வரகு சாகுபடி தொழில்நுட்பங்கள்**





**பட்டங்கள் மற்றும் இரகங்கள்**

கேழ்வரகு சாகுபடிக்குச் சிறந்த பட்டங்கள் ஆடி (ஜுன்–ஜுலை)

மற்றும் புரட்டாசி (செப்டம்பர்-அக்டோபர்) பட்டங்கள் ஆகும், குறிப்பாக மானாவாரி சாகுபடிக்கு ஆடிப்பட்டம் சிறந்தது. நீர் வசதியைப் பொறுத்து ஆண்டு முழுவதும் பயிரிடக்கூடிய ராகி, செம்மண் மற்றும் வண்டல் மண் நிலங்களில் சிறப்பாக வளரும். கேழ்வரகின் சாகுபடி வயது (பயிர்காலம்) பொதுவாக 95 முதல் 120 நாட்கள். கோ 9, 13, கோ (ரா) 14, கோ15, பையூர் 1 போன்றவை அதிக விளைச்சல் தரும் இரகங்கள் ஆகும். ஜூன், ஜூலையில் மானாவாரி பயிராக பையூர் 1, கோ 13, கோ (ராகி) 14, பையூர் 2 ரகங்களை நடலாம். இறவைப் பயிராக செப்., அக்டோபரில் பையூர் 1, கோ (ராகி) 14, கோ 13 ரகங்களையும் டிச., ஜனவரியில் கோ 9, கோ 13, கோ (ராகி) 14, திருச்சி 1 ரகங்கள் பயிரிடப்படுகிறது. அத்தியந்தல் 1 ரகம், வறட்சியான பகுதியில்கூட அதிக மகசூல் தரும்.

### நிலம் தயார் செய்தல்

கேழ்வரகு சாகுபடி செய்வதற்கு முன் நிலத்தை நன்றாக புழுதி பட உழவு 3 முறை செய்து களைகள் இல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும். நிலத்தில் தண்ணீர் தேங்கக் கூடாது. ஏக்கருக்கு 12.5 டன் தொழு உரம் இடவேண்டும்.

### விதையளவு மற்றும் விதைநேர்த்தி

ஒரு ஹெக்டேருக்கு 15-20 கிலோ விதைகள் தேவைப்படும். ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் திராம் அல்லது கார்பன்டசிம் கலந்து விதை நேர்த்திசெய்ய வேண்டும். ஒரு எக்டேருக்கு தேவையான விதைகளை ஒரு சதவீத பொட்டாசியம் குளோரைடு ரசாயனத்தில் 6 ணி நேரம் ஊற வைக்க வேண்டும். அதை எடுத்து 5 மணி நேரம் நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். இந்த இரு முறைகளின் மூலம் பயிர் வறட்சியை தாங்கி வளர்ந்து மகசூல் அதிகம் தரும். கை விதைப்பு முறையில் விவசாயிகள் கேழ்வரகை பரவலாக தூவுவர். இதனால் பயிரின் வளர்ச்சி ஒரே சீராக இருக்காது. கொர்ரு அல்லது விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பு செய்தால் அதிகப் பரப்பளவில் மண்ணின் ஈரம் காயும் முன்பே விதைக்கலாம். விதைக்கும் போது 2.5 செ.மீ., ஆழத்தில் விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 22.5 செ.மீ., இடைவெளி, செடிக்கு செடி 10 செ.மீ., இடைவெளி இருக்க வேண்டும். சில பகுதிகளில் கேழ்வரகு நாற்று எடுத்து நடவு செய்-யலாம். அதற்கு நாற்றின் வயது 22 முதல் 25 நாட்களாக இருக்க வேண்டும். தேர்ந்தெடுத்த நிலத்தில் 10 செ.மீ., இடை வெளியில் நாற்றுகள் நட வேண்டும்.

நாற்று முறையில் நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு 5 சென்ட் நிலத்தில் 3 அல்லது 5 கிலோ விதைகளை விதைக்க வேண்டும். 3 வாரம் கழித்து 22.5க்கு 10 செ.மீ. இடைவெளியில் நடவு செய்ய வேண்டும்.



## நீர்ப்பாசனம்

விதைத்தவுடன் ஒரு முறை, 3ம்நாள், பூக்கும் பருவம், பால்பிடிக்கும் பருவத்தில் தண்ணீர்விட வேண்டும். நிலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு 8 முதல் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். மானாவாரி கேழ்வரகு சாகுபடியில் மண் ஈரம் காக்க சால் மற்றும் பார், சம உயர வரப்பு, போன்ற நுட்பங்களை கடைப்பிடிக்கலாம். குறைந்த தண்ணீர் தேவைப்படும் பயிர் என்றாலும், கதிர் விடும் பருவத்தில் போது மான அளவு நீர் பாசனம் செய்வது மகசூலை அதிகரிக்கும்.

## உர நிர்வாகம் மற்றும் நுண்ணுயிர் உரங்கள்

ஒரு எக்டேர் நிலத்தில் 12.5 டன் மட்கிய தொழுஉரத்தை கடைசி உழவின் போது பரப்பிய பின்னர் உழவேண்டும். மண் பரிசோதனை செய்து அதற்கேற்ப உரமிட வேண்டும். இறவை சாகுபடிக்கு ஒரு ஹெக்டருக்கு பரிந்துரைக்கப்பட்ட உர அளவான தழைச்சத்து 90 கிலோ, மணிச்சத்து 45 கிலோ, சாம்பல் சத்து 45 கிலோ இடவேண்டும். 10 பொட்டலம் (2000 கிராம்) அசோஸ் பைரில்லம் மற்றும் 10 பொட்டலம் பாஸ்போ பாக்டீரியத்தை மக்கிய தொழுஉரத்துடன் கலந்து ஒரு ஹெக்டர் நிலத்தில் பரப்பலாம். இறவையில் 5 பாக்கெட் அசோஸ்பைரில்லத்தை 40 லிட்டர் தண்ணீரில் கலந்து ஒரு ஹெக்டருக்குத் தேவையான நாற்றுக்களை 15-30 நிமிடம், வேர் மூழ்கும் படி நனைத்து நடவு செய்யலாம்.



## களை மேலாண்மை

விதைத்த அல்லது நட்ட 18ம் நாள் ஒரு களையும், 45ம் நாள் மற்றொரு களையும் எடுக்க வேண்டும். (அ) ஒரு ஹெக்டருக்கு இரண்டுலிட்டர் பியூட்டா குளோர்களைக் கொல்லியை 500 லிட்டர் தண்ணீருடன் கலந்து நாற்று நட்ட மூன்றாம் நாள் கைத்தெளிப்பான் கொண்டுதெளிக்க வேண்டும்.



## பயிர் பாதுகாப்பு மேலாண்மை

கேழ்வரகைப் பொதுவாக பூச்சிகள் அதிகம் தாக்குவதில்லை. எனினும் பருவ மாற்றத்திற்கு ஏற்ப வெட்டுப்புழுக்கள் தண்டு துளைப்பான்கள், சாறு, உறிஞ்சிகள், வேர் அசுவினி முதலிய பூச்சிகள் தாக்கலாம். வெட்டுப்புழுக்களைக் கட்டுப்படுத்த மாலத்தியான் (50% ஈசி) 200 மிலி தண்ணீரில் கலந்து தெளிக்கவும், தண்டுத் துளைப் பான்களை கட்டுப்படுத்த தூர்கட்டும் பருவத்திலும், பூக்கும் பருவத்திலும் இப் பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தலாம், வேர் அசுவினியைக் கட்டுப்படுத்த டைமித்தோயைட் 0.03 சதவீத கலவையை வேர்ப்பகுதியில் ஊற்றவும்.

கேழ்வரகினை குலை நோய், செம்புள்ளி, தேமல் நோய் தாக்கலாம். குலை நோயினைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக்டருக்கு 500 கிராம் கார்பெண்டசிம் மருந்தினை நீரில் கலந்து தெளிக்க வேண்டும். செம்புள்ளி நோயைக் கட்டுப்படுத்த ஒரு ஹெக் டருக்கு எடிபென்பாஸ் 500 மில்லி அல்லது மேன்கோசெப் 1 கிலோ என்ற அளவில் நீருடன் கலந்து தெளிக்க வேண்டும். தேமல் நோயினைக் கட்டுப்படுத்த நோய் தாக்கிய செடிகளை முதலில் அகற்றவும். இந்நோய் தத்துப் பூச்சிகளால் பரவுவதால் அதைக் கட்டுப்படுத்த மோனோ குரோட்டோபாஸ் 0.05 சதவீதம் (500 மிலி/ஹெக்டர்) நோய் தோன்றியவுடன் தெளிக்க வேண்டும். தெளித்த 15 நாட்களில் மறுமுறையும் தெளித்தால் நோய் முற்றிலும் கட்டுப்படும். இதில் இலைப்புள்ளி மற்றும் குலை நோய் தாக்குதல் வரும். 0.2 சதவீதம் டைத்தேன் எம் 45 அல்லது பஞ்சகாவ்யத்துன் வேப்பெண்ணெய், சூடோமோனஸ் அல்லது பேசில்லஸ் சப்டிலிஸ் கலந்து பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும். அஸ்வினி பூச்சியை கட்டுப்படுத்த 18 கிலோ எமிசான் தூவ வேண்டும். கேழ்வரகுடன் ஊடுபயிராக அவரை, உளுந்து பயிர்களை 8க்கு 2 என்ற வரிசையில் பயிரிடலாம்.

அறுவடை மகசூல் பயிர்கள் முற்றிய பின் இரு முறையாவது அறுவடை செய்ய வேண்டும். சரியான முறையில் பராமரித்தால் ஏக்கருக்கு 2500 முதல் 4000 கிலோ மகசூல் கிடைக்கும்.

தகவல் : ***கா.அரிபுத்திரன் , வேளாண்மை அலுவலர், உயிரியல் கட்டுப்பாட்டு ஆய்வகம், விருதுநகர்– 82480 80922.***



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்



## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்**
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha POWERGRID BHEL

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# நீலகிரி, தேனி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் கனமழை வாய்ப்பு!

சென்னை, மே 28

தமிழகத்தில் நீலகிரி, கிருஷ்ணகிரி உள்ளிட்ட 8 மாவட்டங்களில் இன்று (மே 29) கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இது தொடர்பாக சென்னை வானிலை மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தென்கிழக்கு அரபிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது. மேலும், மத்திய கிழக்கு-தென்கிழக்கு வங்கக்கடல் பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் இன்று (மே 29) ஒரு சில இடங்களிலும், 30-ம் தேதி முதல் ஜுன் 3-ம் தேதி வரை ஒரு சில இடங்களிலும் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று தேனி, திண்டுக்கல், நீலகிரி, வேலூர், திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி மற்றும் ராணிப்பேட்டை மாவட்டங்களிலும், 30-ம் தேதி கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், திண்டுக்கல், நீலகிரி, தேனி, மதுரை மற்றும் விருதுநகர் மாவட்டங்களிலும், 31-ம் தேதி நீலகிரி, கோவை, தேனி, திண்டுக்கல், ஈரோடு, நாமக்கல், திருப்பத்தூர், திருப்பூர், சேலம், திருவண்ணாமலை, கிருஷ்ணகிரி, கரூர், திருச்சி, தஞ்சாவூர் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இடி, மின்னல் மற்றும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும்.

தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை இன்றும், நாளையும், ஓரிரு இடங்களில் 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதிகமாக இருக்கக்கூடும்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

31-ம் தேதி அதிகபட்ட வெப்பநிலை வழக்கமான அளவை ஒட்டியே இருக்க வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் இன்று வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 105 டிகிரி, குறைந்தபட்ச வெப்பநிலை 86 டிகிரி ஃபாரன்ஹீட் அளவை ஒட்டி இருக்கக்கூடும்.

தமிழக கடலோரப் பகுதிகள், மன்னார் வளைகுடா மற்றும் குமரிக்கடல் பகுதிகளில் நாளை முதல் ஜூன் 1-ம் தேதி வரை சூறாவளிக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிமீ வேகத்திலும், இடையிடையே 60 கிமீ வேகத்திலும் வீசக்கூடும்.

